

# இடம் பொருள் கலைஞர்

79

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சுற்றுலாப் பேருந்துகள்!**











# சுற்றுலாப் பேருந்துகள்!

## தமிழ்நாட்டின் பெருமையைச் சொல்லும் தூதுவர்கள்!

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளை வைத்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அந்தப் பாரம்பரியம் இன்றும் தொடர்கிறது. இந்தத் திணைகளுக்குரிய நிலங்கள், கலாச்சாரங்கள் ஆகியவை உலகமய மாக்கலின் தாக்கங்களுக்கு இடையிலும் தங்களைத் தக்க வைத்துக்கொண்டுள்ளன. அதனால்தான், இந்தியாவிலேயே தமிழ்நாடு மிக முக்கியமான சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.*

*இங்கு 1,076 கிலோமீட்டர் நீளத்துக்கு கடற்கரை இருக்கிறது. சுமார் 43 ஆயிரத்துக்கும் அதிகமான கோயில்கள் இருக்கின்றன. 58 புவிசார் குறியீடுகளைப் பெற்ற பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. வனவிலங்கு சரணாலயங்கள்-17, தேசிய பூங்காக்கள்-5, பறவைகள் சரணாலயங்கள்-17, பாதுகாக்கப்பட்ட பகுதிகள்-3, புலிகள் காப்பகங்கள்-5 உள்ளன. சர்வதேச அளவில் போற்றப்படும் நீலகிரி, மன்னார் வளைகுடா மற்றும் அகஸ்தியர் மலை ஆகிய 3 உயிர்கோளக் காப்பகங்கள் இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் ஓர் அங்கமான 'யுனெஸ்கோ' அமைப்பால், தமிழ்நாட்டின் 6 இடங்கள் உலகப் பாரம்பரியச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.*

*இந்தக் காரணங்களால்தான் இந்தியாவில் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து சேரும் மாநிலங்களின் பட்டியலில் பல்லாண்டுகளாக தமிழ்நாடு முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இவ்வளவு பெருமைகள் வாய்ந்த நமது மாநிலத்தைப் பார்வையிட, ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் உலகெங்கிலுமிருந்து சுற்றுலா வருகிறார்கள். அவர்களின் பயணத்தைச் சிறப்பாக்க வேண்டும் என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் யோசனையில் உதித்ததுதான், 'சுற்றுலாப் பேருந்துகள்".*

### சுற்றுலாத் துறையும் சுற்றுலா வளர்ச்சியும்

*1971-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்புக்கு வந்தபோது, அவரால் உருவாக்கப்பட்டதுதான் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும். இன்று சுற்றுலாத் துறை 38 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 19 சுற்றுலாத் தகவல் மையங்களுடன், தமிழ்நாட்டிலும், நாடு முழுவதும் உள்ள முக்கியப் பெருநகரங்களிலும் செயல்பட்டு வருகிறது.*

*சுற்றுலா தொடர்பான தகவல்களை அளித்தல், திட்டங்களைச் செயல்படுத்துதல், நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், பயணக் கண்காட்சிகளில் பங்கேற்றல், பிற மாநில சுற்றுலா அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல் போன்ற பணிகளை இந்தத் துறை மேற்கொள்கிறது.*

*தமிழ்நாட்டுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு இன்னொரு மிக முக்கியக் காரணம், இங்கு சாலை, ரயில், விமானம், கப்பல் என சகலவிதமான போக்குவரத்து வசதிகளும், மினி பஸ், மெட்ரோ ரயில், மின்சார ரயில் போன்ற இணைப்புப் போக்குவரத்து வசதிகளும் நிறைந்திருப்பதுதான்.*

*இவ்வளவும் சுற்றுலாப் பயணிகளின் நாட்களை இனிமையாக்கவும், அவர்களைப் பாதுகாப்பாகவும் சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் சென்று வர இந்தியாவிலேயே முதன்முதலாக முன்னெடுப்பு ஒன்றை கலைஞர் அவர்கள் மேற்கொண்டார். அதுதான் 'சுற்றுலாப் பேருந்துகள்'. முற்றிலும் சுற்றுலாப் பயணிகளுக்காகவே, குளிரூட்டப்பட்ட இந்த சொகுசுப் பேருந்துகள் சுற்றுலாத் துறையால் இயக்கப்படுகின்றன.*



தற்சமயம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 15 சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இதில் 43 இருக்கைகள் கொண்ட 5 வால்வோ பேருந்துகள், 35 இருக் கைகள் கொண்ட 4 குளிர்சாதனப் பேருந்துகள், 35 இருக்கைகள் கொண்ட 3 குளிர்சாதனமற்ற பேருந்துகள், 18 இருக்கைகள் கொண்ட 3 குளிர்சாதனப் பேருந்துகள் ஆகியவை அடங்கும்.

சமீபத்தில், பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்கில், 35 இருக்கைகள் கொண்ட 4 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 18 இருக்கைகள் கொண்ட ஒரு குளிர்சாதனப் பேருந்து ஆகியவை இயக்கப்பட்டு வருகின்றன.

### சிறந்த உபசரிப்பின் தூதுவர்கள்

*1972-ஆம் ஆண்டு மே 9 அன்று, சுற்றுலாத் துறைக்கென்று வாங்கப்பட்ட முதல் சுற்றுலாப் பேருந்தின் பயணத்தை கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் தனது உரையில், "மேல்நாடுகளில் இந்தத் துறை வளர்ந்திருப்பது ஏதோ உல்லாசமாகப் பொழுதுபோக்க வருகின்றவர்களுக்கென்று மாத்திரமல்லாமல், அந்தந்த நாடுகளுடைய பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் முன்னேற்றவும் பயன்படுகிறது" என்று குறிப்பிட்டார்.*

*அந்த முன்னெடுப்பு தொடங்கப்பட்டபோது, சுற்றுலாத் துறையிடம் ஒரே ஒரு பேருந்துதான் இருந்தது. இன்று அதனிடம் 15 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அந்த நிகழ்வில் கலைஞர் மேலும் கூறியதாவது:*

*"நம்முடைய நாட்டுப் பெருமைகளை, சரித்திரச் சான்றுகளை, மாமன்னர்கள் நம் நாட்டில் எப்படியெல்லாம் அரசோச்சினார்கள், அந்தக் காலத்தில் ஜனநாயகமுறை எப்படி அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளத்தக்க அளவிற்கு நாம் இத்துறையைப் பயன்படுத்தியாக வேண்டும்.*

*ஓர் ஊர்தியைப் பயன்படுத்துவதற்காக இந்த விழா நடைபெறுகிறது. ஆனால், மேல்நாடுகளில் இப்படிப்பட்ட ஊர்திகள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் நடமாடிக் கொண்டிருக்கின்றன. 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்ற அளவில் விழா நடத்திக் கொண்டிருக்கிறோம். 'அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது' என்று பழமொழி சொல்வார்கள். இதன் சின்னங்கூடக் குடையாகத்தான் இருக்கிறது.*

*இந்த ஊர்தியில் அமர்ந்திருந்தபோது அமைச்சர் இராசாராம், உதகை போன்ற இடங்களில் இது போன்ற சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டிகளாக விளக்கமுரைக்கும் வகையில், அரசாங்க அதிகாரிகளுடைய வீட்டுப் பெண்கள் வருவதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாகவும், அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட செலவுத் தொகை தர வேண்டியிருக்குமென்றும் சொன்னார்.*

**இன்று தமிழ்நாடு, சுற்றுலாவில் செழிக்கிறது. சிறந்த உபசரிப்பின் தூதுவர்களாக சுற்றுலாத்துறை பேருந்துகளும் திகழ்கின்றன!**

*"இந்த ஊர்தி இலாபகரமாக நடக்கும். நாளைய தினமே பயணிகள் எல்லாம் இதில் செல்லத் தயாராக இருக்கிறார்கள்" என்று அறிவித்தார்கள். ஒரு நாளைக்கு மட்டும் இலாபகரமாக நடந்தால் போதாது. தொடர்ந்து, இன்னும் பல ஊர்திகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைபெற்றால்தான் இலாபகரமாக நடக்கிறது என்று அர்த்தம்.*

*அதே நேரத்தில் தமிழ்நாட்டின் பெருமைகளை மற்ற மாநிலங்களுக்கு, வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொல்கிற தூதுவர்களாக இத்துறை அமைந்திட வேண்டும்".*

*அவர் சொன்னபடியே, இன்று தமிழ்நாடு, சுற்றுலாவில் செழிக்கிறது. சிறந்த உபசரிப்பின் தூதுவர்களாக சுற்றுலாத்துறை பேருந்துகளும் திகழ்கின்றன!*

**...வலம் வருவோம்**

## நவீன கவிதைகளில் கலைஞர்!





முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் அவர் புகழ்போற்றும் நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளிவந்துள்ளன. அதில் கவனிக்க வைக்கிறது 'என் உயிரினும் மேலான' கவிதை நூல்.

திராவிட இயக்கத் தலைவர்களை உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகள் மரபுக் கவிதைகளில் எழுதப்பட்டாலும், நவீன கவிதை வடிவங்களில் பொதுவாக எழுதப்படுவதே இல்லை. தந்தை பெரியாரைப் பற்றிப் பேசும் 'அங்கிருந்து தான் வந்திருக்கிறோம்' என்கிற கவிதைத் தொகுப்பு புதிய முயற்சியாக அமைந்தது. அந்த வரிசையில் நவீன கவிதைகளில் கலைஞரை எழுதியிருக்கிறார் தியாக.இனியவன்.

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினரும், இல.மாங்குப்பம் கிளைக் கழகத்தின் செயலாளருமான, கழக பொற்கிழி பெற்ற முன்னோடி மறைந்த கங்கை.தியாகராஜன் அவர்களின் மகன் என்கிற பின்புலம் அவர் கலைஞரைக் கொண்டாடுவதற்கு ஆதாரமாக உள்ளது. கல்லூரிக் காலம் தொட்டே கவிதைகள் எழுதிவரும் இவர், தனது இரண்டாவது கவிதைத் தொகுப்பாக கலைஞர் மீது கொண்டிருந்த பற்றினை வெளிப்படுத்தி இருக்கிறார்.

'பாலாற்று மணற்பரப்பில் / தேனாறாக தமிழைத் தெளித்து விட்ட தலைவன்' என பாலாற்றுக்குள் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்ட நிகழ்வைக் காட்சிப்படுத்துகிறது ஒரு கவிதை.

'தண்டவாளத்தில் / தலை வைக்காது / கல்லக்குடியை விட்டு / கலைஞர் வெளியேறிப் போயிருந்தால் / வரலாறு வெறுமனே / ஒரு ரயிலைப் போல / வேகமாய்க் கடந்து போயிருக்கும்' என்கிற கவிதை, கல்லக்குடி வரலாற்றைக் கவிதைக்குள் கொண்டுவருகிறது. சிறுபான்மை மக்களுக்கும், கலைஞர் - கழகத்துக்குமான உறவுகளைப் பேசும் கவிதைகளும் உள்ளன. ரூ.200 விலையுள்ள இந்த நூலினை 'சொற்பறவை பதிப்பகம்' வெளியிட்டுள்ளது. நூல் பெற 94424-13618 எண்ணுக்கு அழைக்கலாம்.

## :ப்ளாஷ்பேக்





உடுமலை U.N.P.குமார்

### வரலாற்றுக் கையேடு!

2002-ஆம் ஆண்டு ஏப்ரல் 27, 28 ஆகிய தேதிகளில் மேட்டுப்பாளையம் கல்லாரில் தி.மு.க இளைஞர் அணிப் பயிற்சிப் பாசறைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புலவர் நன்னன், மு.இராமநாதன் ஆகியோர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றுப் பயிற்சி அளித்தனர். அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் எங்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நானும், துணை அமைப்பாளர்களும் அதில் பங்கேற்றவர்களுக்காக, கழக வரலாற்றைக் கூறும் கையேடு ஒன்றைத் தயார் செய்திருந்தோம். தளபதி அவர்களிடமும் அதை வழங்கியபோது, இப்படம் எடுக்கப்பட்டது. அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் பொங்கலூர் ந.பழனிசாமி, பா.அருண்குமார் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் தென்றல் செல்வராஜ் ஆகியோரும் பங்கேற்றனர்.

**- உடுமலை U.N.P.குமார், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், திருப்பூர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### 1986-ஆம் ஆண்டு எழுச்சி!

1986-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் நான்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்தது. அதையடுத்து, மார்ச் 23-ஆம் தேதி அதற்கான தேர்தல் நடைபெற்றது. பட்டதாரிகள், ஆசிரியர்கள் வாக்களித்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேர்தல் இது. ஆனால், ஆளும் கட்சியின் அதிகார துஷ்பிரயோகங்களையும் மீறி, நான்கு இடங்களில் தி.மு.கழகம் இரண்டு இடங்களிலும், கழக ஆதரவுடன் சுயேட்சையாகப் போட்டியிட்ட 2 வேட்பாளர்களும் வெற்றிபெற்றனர். ஏற்கெனவே, நான்கு இடங்களைப் பெற்றிருந்த ஆளுங்கட்சி நான்கு இடங்களையும் இழந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

549

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131